இனிமையான குழந்தைகளே! நறுமணம் மிக்க மலராகுங்கள், ஸ்ரீ கிருஷ்ணர் முதல் நம்பர் நறுமணம் மிக்க மலர் ஆவார். ஆகையினால் தான் அனைவருக்கும் மிகவும் பிரியமானவராக இருக்கிறார். அனைவரும் கண்களிலேயே அவரை வைத்துக் கொள்கின்றனர்.

கேள்வி: லௌகீகத்தில் இனிமையான சம்பந்தம் எது? மற்றும் மிக இனிமையான சம்பந்தம் என்று எதை கூறுவார்கள்?

பதில்: லௌகீகத்தில் கூட இனிமையானவர் என்று தந்தை தான் அழைக்கப்படுகிறார். குழந்தை களாகிய நீங்கள் கூட சொல்கிறீர்கள், எங்களுக்கு மிகமிக இனிமையானவர், அன்பானவர் தந்தை யாவார் மற்றும் நாங்கள் அவருடைய அன்பான குழந்தைகள். மிக இனிமையானவர் என்று டீச்சரை சொல்வார்கள், ஏனெனில், டீச்சர் கல்வியை கற்ப்பிக்கிறார். ஞானம் வருமானத்துக்கு ஆதாரம் ஆகும். உங்களுக்கும் கூட முதலில் ஞானம் கிடைக்கிறது. குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் இந்த ஞானத்தை தாரணை செய்ய வேண்டும் மற்றும் தாரணை செய்விக்க வேண்டும்.

பாடல்: இறந்தாலும் உன் மடியில், வாழ்ந்தாலும் உன் மடியில்........

குழந்தைகள் பாட்டைக் கேட்டீர்கள். யாராவது இறந்தால், மற்றொரு தாய் தந்தையிடம் சென்று பிறவி எடுப்பார்கள். தந்தைக்கு வாழ்த்துக்கள் கொடுக்கப்படுகிறது. நாம் ஆத்மாக்கள் அழியாத வர்கள் என்று இப்போது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். ஒரு சரீரத்தை விடுத்து இன்னொரு சரீரத்தை எடுக்கிறார்கள், அதாவது ஒரு தந்தையை விடுத்து இன்னொரு தந்தை யிடம் சென்று பிறவி எடுக்கிறார்கள். இது சரீரத்தினுடைய விசயம் ஆகும். நீங்கள் 84 சாகார தந்தையைப் பெற்றுள்ளீர்கள். உண்மையில் நீங்கள் நிராகார தந்தையின் குழந்தைகள் ஆவீர்கள். ஆத்மாக்களாகிய உங்களின் வசிப்பிடம் கூட நிர்வாணதாமம்-சாந்திதாமம் ஆகும். அங்கு பாபா வின் கூடவே அனைவரும் வசிக்கிறார்கள். அதை ஆத்மாக்களின் உலகம் என்று சொல்வோம். ஆத்மாக்களாகிய நீங்களும் அங்கே வசிக்கிறீர்கள், பாபாவும் அங்கே இருக்கிறார். இங்கே லௌகீகத் தந்தையின் குழந்தைகளாகும் போது அவரை மறந்து விடுகிறீர்கள். சத்யுகத்திலோ பாபாவை யாரும் சிந்தனை செய்வதில்லை. புத்தி கீழே வந்து விடுகிறது. அவரை நினைவு செய்தால் ஓ பாபா! என்று சொல்வார்கள். இவரைக் (பிரம்மா பாபா) கூட பாபா என்று சொல் கிறார்கள். அவரும் கூட தந்தை ஆவார். லௌகீகத் தந்தையை இங்கே பார்க்கிறார்கள். பரலௌகீகத் தந்தையை அழைக்கும் போது பார்வை மேலே செல்கிறது. இப்போது நீங்கள் அந்த பாபா வினுடையவர்களாக ஆகியுள்ளீர்கள். முதலில் நாம் தூய்மையாக இருந்தோம், இராஜ்ய பாக்கியம் அடைந்தோம், இப்போது 84 பிறவிகள் முடிந்திருக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். உலகினர் துக்கம் நிறைந்தவர்களாக ஆகி உள்ளார்கள். ஆகையினால் தான் பாபாவை நினைவு செய்கிறார்கள். இந்த ஆடையை (சரீரம்) அணிந்து- அணிந்து தற்போது அது தமோபிரதானம் ஆகிவிட்டது. முதலில் ஆத்மா மற்றும் சரீரம் இரண்டுமே சதோபிர தானமாக இருந்தது. பிறகு ஆத்மா சதோ ரஜோ தமோவில் வருகிறது. முதலில் தங்கமாக இருந்தது, பிறகு வெள்ளி, தாமிரம், இரும்பில் வந்தது. இதை ஆபரணம் என்றும் சொல்லப்படுகிறது. தங்கத்தில் உலோகத்தை

(செம்பு) கலக்கிறார்கள் அல்லவா! பாபா புரிய வைக்கின்றார், ஆத்மாக் களாகிய நீங்கள் இப்போது தூய்மையற்றவராகி விட்டீர்கள். தங்கம் கறுப்பாகி விட்டது. நீங்கள் கறுப்பாக தூய்மையற்றவராகி விட்டீர்கள். முதலில் ஆத்மாக்களாகிய நீங்கள் தூய்மையாக இருந்தீர்கள், சரீரம் கூட தூய்மையாக இருந்தது, பிறகு தற்போது தூய்மையான சரீரத்தை எப்படி எடுப்பீர்கள்? ஸ்நானம் செய்வதன் மூலமாக எடுப்பீர்களா என்ன? ஸ்நானம் செய்வதன் மூலம் எதுவும் ஆகப்போவதில்லை. ஹே, தூய்மையற்றவர்களை தூய்மையாக்கக் கூடிய பாபா! என்று ஆத்மா அழைக்கிறது. 'பாபா' என்ற வார்த்தை எவ்வளவு இனிமையாக இருக்கிறது! மிகவும் நன்றாக இருக்கிறது. பாரதத்தில் தான் பாபா என்ற வார்த்தை இருக்கிறது. குழந்தைகள் பாபா-பாபா என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். நாம் ஆத்ம அபிமானிகள் ஆகி பாபாவினுடையவர்கள் ஆகி இருக்கின்றோம், என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்திருக் கிறீர்கள். நான் முதன் முதலில் உங்களை சொர்க்கத்திற்கு அனுப்பி இருந்தேன் என்று பாபா கூறுகின்றார். நடிப்பை நடித்து நடித்து இப்போது கடைசியில் வந்து சேர்ந்திருக் கிறீர்கள். உள்ளுக்குள் எப்போதும் பாபா-பாபா என்று சொல்லிக் கொண்டே இருங்கள். பாபா வந்திருக் கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஹே, தூய்மையற்றவர்களை தூய்மையாக்கக்கூடிய பாபா! வந்து தூய்மையற்ற எங்களை தூய்மையாக்குங்கள், என்று அனைவரும் அவரைத் தான் நினைவு செய்கின்றார்கள். அனைவரும் அவரவருடைய மொழியில் அழைக்கிறார்கள். எப்போது உலகம் பழையதாகிறதோ, அப்போது அழைக்கிறார்கள். அப்படி எனும் போது நிச்சயமாக சங்கமத்தில் தான் வருவார். இதைக் கூட நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். சாஸ்திரத்தில் அர்த்தமற்றதாக நிறைய எழுதி விட்டார்கள். நமக்கு மிகவும் அன்பானவர் பாபா, மிகவும் பிரியமானவர் பாபா என்ற உறுதியான நம்பிக்கை குழந்தை களாகிய உங்களுக்கு இருக்கிறது. இனிமையான குழந்தைகளே என்று பாபா கூட சொல்கிறார். இனிமையான, மிக இனிமையான, மிக மிக இனிமையான இப்போது இனிமையானவர் யார்? லௌகீக சம்பந்தத்தில் கூட தந்தை தான் இனிமையானவராக இருப்பார். பிறகு மிக மிக இனிமையானவர் என்று டீச்சரை சொல்வோம். டீச்சர் நல்லவராக இருக்கிறார், கற்பிக்கவும் செய்கிறார். ஞானம் வருமானத்திற்கு ஆதாரம் என்று சொல்லப் படுகிறது. ஆக இந்த ஞானம் தான் வருமானத்திற்கு ஆதாரம் ஆகும்.

யோகத்தை நினைவு என்றும், ஞானத்தை நாலேஜ் என்றும் சொல்லப்படுகிறது. உங்களை சொர்க்கத்திற்கு எஜமானர் ஆக்கி இருந்தேன் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். அதனால் தான் சிவஜெயந்தி கூட கொண்டாடுகிறார்கள். ஆனால் சிவபாபா எப்படி வந்தார்? இது யாருக்கும் தெரியாது. சித்திரங்களில் திரு மூர்த்தி இருக்கிறது, அதில் மேலே சிவன் இருக்கிறார். பிரம்மா மூலமாக ஸ்தாபனை, ஸ்தாபனையை யார் செய்விக்கிறார்? செய்பவர் செய்விப்பவர் சிவபாபா ஆவார். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு மேலே சிவன் இருக்கிறார். அவர்கள் படைப்பாகி விடுகிறார்கள். அவர்களையும் படைப்பவர் தான் சிவன். அவர் நிராகாரராக இருக்கிறார். இது சாகார உலகமாகும். சிருஷ்டி சக்கரம் திரும்பவும் சுற்றுகிறது. சூட்சும வதனத்தை சிருஷ்டி சக்கரம் என்று சொல்லமாட்டார்கள். இந்த மனித சிருஷ்டி தான் சுற்று கிறது. மற்றபடி சூட்சுமவதனத்திலோ அல்லது மூலவதனத்திலோ, சக்கரத்தின் விஷயமே கிடையாது. இப்போது கலியுக நரகமாகும், சத்யுகம் சொர்க்க மாகும். இப்போது

நரகவாசிகளை சொர்க்கவாசிகளாக யார் ஆக்குவது? வாம மார்க்கத்தில் (விகார வழி) சென்றதனால் தான் தூய்மையற்றவர் ஆகிவிடுகிறார்கள். நாளுக்கு-நாள் துக்கத்தில் வந்து கொண்டே இருக்கிறார் கள். உலகம் தமோபிரதானம் ஆகிவிடுகிறது, அப்போது தான் இது முற்றிலும் தமோ குண புத்தி என்று சொல்கிறார்கள். இது தேவதைக்குச் சமமான மிகவும் சதோபிரதான புத்தியாகும். உண்மையில் பூஜை தேவதைகளுக்குத் தான் நடக்க வேண்டும். ஆனால் இப்போது தேவதைகள் யாரும் இல்லை. ஏனென்றால், அவர்களுக்குள் தெய்வீக குணங்கள் இல்லை. கிறிஸ்துவ மக்கள் கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள், அவரை பூஜிக்கிறார்கள். பாரதவாசிகள் தங்களை தேவி-தேவதைகள், என்று சொல்லிக் கொள்ள முடியாது. ஆனால் அந்த தேவி, இந்த தேவி என்று நிறைய பேருக்கு பெயர்கள் இருக்கின்றது. ஆனால் அந்த குணம் இல்லை. நான் குணமற்றவன், எனக்குள் எந்த குணமும் இல்லை.... என்று பாடவும் செய்கிறார்கள். ஆத்மா இதை யாருக்கு முன் சொல்கிறது? பாபாவுக்கு முன்னால் சொல்ல வேண்டும் அல்லவா? பாபாவை மறந்து சகோதரர்களுக்குப் பின்னால் சென்று விடுகிறார்கள். பிரம்மா, விஷ்ணு, சங்கர் கூட சகோதரர் கள் தான் அல்லவா! அவர்களிடமிருந்து கிடைப்பதற்கு ஒன்றும் இல்லை. சகோதரர் களின் பூஜை செய்து கொண்டே, கீழே விழுந்து கொண்டே செல்கிறார்கள். இப்போது உங்களுக்கோ தந்தையிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. தந்தையை யாரும் அறிந்திருக்கவில்லை. தந்தையை சர்வவியாபி என்று சொல்லி விடுகிறார்கள். அட, தந்தையின் பெயர் என்ன? பெயர் ரூபத்திலிருந்து விடுபட்டவர் என்று சொல்லி விடுகிறார்கள். அட நீங்கள் அகண்ட ஜோதி சொரூபம் என்று சொல்கிறீர்கள். பிறகு எப்படி விடுபட்டவர், என்று சொல்கிறீர்கள்? சட்டப்படி அனைவரும் தமோபிரதானம் ஆகத்தான் வேண்டும், என்பதையும் புரிந்து கொள்கிறார்கள். பிறகு பாபா வரும்போது தான் அனைவரையும் சதோபிரதானம் ஆக்குகிறார். ஆத்மா கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டும். அனைத்து ஆத்மாக்களும் தந்தையின் கூடவே இருப்பவர்கள் ஆவர். புதிய உலகம் பழைய உலகமாக ஆகிறது.

இப்போது நாம் பாபாவினுடையவராக ஆகியிருக்கிறோம், என்று உங்களுக்குத் தெரியும். பாபா வந்திருக்கிறார். பிரம்மாவின் மூலம் ஸ்தாபனை செய்விக்கிறார். பாபா கூறுகின்றார், நான் பிரம்மாவின் உடலை ஆதாரமாக எடுத்திருக்கிறேன், பாக்கியசாலி ரதத்தில் சவாரி செய் கின்றேன். ரதத்தில் கண்டிப்பாக ஆத்மா இருக்கும் அல்லவா? பாகீரதன் கங்கையை கொண்டு வந்ததாகச் சொல்கிறார்கள். இப்போது கங்கை ஜடையிலிருந்து எப்படி வந்தது? இது மலைகளி-ருந்து இனிமையான நீராக வருகிறது. கடலிலிருந்து மேகங்கள் நிரம்பி பிறகு பொழிகிறது. இன்றைக்கு அறிவியலின் சக்தி மூலமாக தண்ணீரைக் கூட இனிப்பாக்கி விடுகிறார்கள். இயற்கையான மேகம் எவ்வளவு பொழிகிறது. எவ்வளவு தண்ணீர் வந்து விடுகிறது. வெள்ளம் ஏற்பட்டு விடுகிறது. இவ்வளவு நீரும் எங்கிருந்து வந்தது? மேகம் தான் கொண்டு வருகிறது. மற்றபடி இந்திரனோ, வேறு யாரோ கிடையாது. மேகங்கள் நிரப்பப்பட்டு பிறகு மழையாக பொழிகிறது. ஆனால் உண்மையில் இங்கு ஞானத்தின் மழையாகும். இது ஞானமல்லவா! இதன் மூலம் என்ன நடக்கிறது? தூய்மையற்ற நிலையிலிருந்து தூய்மையாகிறோம். கங்கை, யமுனை நதிகள் சத்யுகத்திலும் இருக்கத்தான் செய்யும். கிருஷ்ணர் அங்கே விளையாடியதாகச் சொல்கிறார்கள். உண்மையில் அப்படி எந்தவொரு விஷயமும் கிடையாது.

அங்கே கிருஷ்ணரை மிக பாதுகாப்பாக வளர்க்கிறார்கள். அவர் மிகவும் நல்ல மலர் அல்லவா? மலர் எவ்வளவு பிடித்தமானதாக இருக்கிறது. மலர்களிலிருந்து தான் நறுமணம் ஏற்படுகிறது. முள்ளிலிருந்து நறுமணம் எற்படுமா என்ன? இதுவோ முள் நிறைந்த காடாகும். நிராகார தந்தை சொல்கிறார், நான் வந்து மலர்கள் நிறைந்த தோட்டமாக (ஏஹழ்க்ங்ய் ர்ச் ச்ப்ர்ஜ்ங்ழ்ள்) ஆக்குகிறேன். ஆகையினால் தான் பபூல்நாத், என்று பெயர் கூட வைக்கிறார்கள். பபூல் முட் களை மலராக ஆக்குகிறார். ஆகையினால் தான் மகிமை பாடப்படுகிறது - முட்களை மலராக்கக்கூடிய நாதனே! ஆக பாபாவிடம் எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். லௌகீக தந்தை இருந்தாலும் கூட ஆத்மா பரலௌகீக தந்தையை நினைவு செய்கிறது, ஏனெனில், துக்கமாக உள்ளது. இது கூட விளையாட்டாகும். நீங்கள் அரைகல்பமாக நினைவு செய்து கொண்டே வந்திருக்கிறீர்கள். அவர் வந்ததனால் தான் சிவஜெயந்தி கொண்டாடுகிறார்கள். இப்போது நாம் எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தையின் குழந்தைகளாக ஆகியிருக்கிறோம், என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நம்முடைய சம்பந்தம் அவருடனும் இருக்கிறது. லௌகீக தந்தையுடனும் இருக்கிறது. என்னை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் தூய்மையாகி விடுவீர்கள், என்று எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தை சொல்கிறார். இது லௌகீக தந்தை, இது பரலௌகீக தந்தை, என்று ஆத்மாவுக்குத் தெரிந்திருக்கிறது. ஆத்மா பரலௌகீக தந்தையைத் தான் அழைக்கிறது. ஹே பகவான், ஓ, காட் பாதர்! என்று ஆத்மா சொல்கிறது. எப்போது தந்தை வீட்டில் இருக்கிறாரோ, அப்போது ஓ தந்தையே, என்று ஏன் அழைக்கிறார்கள்? ஆத்மா அந்த அழிவற்ற தந்தையை நினைவு செய்கிறது. அவர் எப்போது வந்து புது உலகத்தைப் படைக்கிறார் -- இதையும் நீங்கள் இப்போது தான் புரிந்து கொள்கிறீர்கள். கலியுகத்தின் கடைசி மற்றும் சத்யுகத்தின் ஆரம்பத்தின் சங்கமத்தில் வருவார், என்று கண்டிப்பாகச் சொல்வீர்கள். பிறகு கலியுகத்தின் ஆயுளை லட்சக் கணக்கான வருடங்கள், என்று சொல்லி விடுகிறார்கள். மனிதர் கள் பகவானை அடைவதற்காக எவ்வளவு அலைந்து திரி கிறார்கள். அனைவரையும் விட அதிக பக்தி செய்வது யார்? அவர்களுக்குத் தான் முதலில் கிடைக்க வேண்டும் அல்லவா? முதன்-முதலில் பக்தியை நீங்கள் தான் ஆரம்பிக்கிறீர்கள், என்று பாபா புரிய வைத்திருக்கிறார். உங்களுக்குத் தான் முதலில் ஞானம் கிடைக்க வேண்டும். முதலில் நீங்கள் அசுர குண முடையவர்களாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் தெய்வீக குணம் நிறைந்த தேவதைகளாக ஆகின்றீர்கள். இத்தனை உயர்ந்த சொர்க்கத்திற்கு நீங்கள் எஜமானர் ஆகின்றீர்கள். அங்கே ஒவ்வொரு பொருளும் முதல் தரமானதாக இருக்கும். நீங்கள் மிகப்பெரிய மனிதர்களாக ஆகின்றீர்கள். உங்களுக்காக அங்கே வைர-வைடூரியங் களால் ஆன மாளிகைகள் உருவாகும்.

எதுவரை பிராமணன் ஆகவில்லையோ அதுவரை சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்க முடியாது. சூத்திரர்கள் ஆஸ்தி எடுக்க முடியாது. இது யக்ஞம் அல்லவா! இதில் கண்டிப்பாக பிராமணர்கள் வேண்டும். யக்ஞம் எப்போதும் பிராமணர்களுடையதாகத் தான் இருக்கிறது. சிவனை ருத்திரன் என்றும் அழைக்கிறார்கள். ஆக இது ருத்ர ஞான யக்ஞம் ஆகும். ருத்ரன் சிவபாபா இந்த ஞான யக்ஞத்தைப் படைத்திருக்கிறார். பக்தி முடியும் போது யக்ஞம் படைக்கப்படுகிறது. பக்தி மார்க்கத்தில் மனிதர்கள் யக்ஞத்தைப் படைக்கிறார்கள். சத்யுகத்தில் தேவதைகள் ஒருபோதும் யக்ஞம் போன்றவைகளை படைப்பதில்லை. ஆனால் இதுவோ ராஜஸ்வ அஸ்வமேத

அவினாசி ருத்ர ஞான யக்ஞமாகும். இந்த பெயரால் சாஸ்திரங்களில் கூட பாடல் இருக்கிறது. பக்தி மற்றும் ஞானம் பாதி-பாதியாகும். பக்தி இரவு மற்றும் ஞானம் பகலாகும். இதை பாபா புரிய வைக்கிறார். எப்போதும் பாபா, என்று சொல்லிக் கொண்டே இருங்கள். பாபா நம்மை உலகத்திற்கு எஜமானர் ஆக்கக் கூடியவராக இருக்கிறார், மிக அன்பான பாபாவாக இருக்கிறார். அவரை விட மிக அன்பானவர் உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது. அரைகல்பமாக பாபாவை நினைவு செய்தீர்கள். அந்த பாபாவினுடையவர்களாக நாம் ஆகியிருக்கிறோம், என்று இப்போது தெரிந்திருக்கிறீர்கள். குடும்ப விவகாரத்தில் இருந் தாலும் பாபாவை நினைவு செய்யுங்கள், என்று பாபா சொல்கின்றார். அனைவரும் இங்கே இருந்து விட முடியாது. ஆமாம், அந்த பாபாவுடன் (சிவபாபா) இருக்க முடியும். எங்கே? எந்த பாபா? அவருடைய பெயர் என்ன? சிவபாபாவுடன் எங்கே இருப்பீர்கள்? பரந்தாமத்தில்! அங்கே அனைத்து ஆத்மாக்களும் இருக்க முடியும். இங்கேயோ அப்படி இருக்க முடியாது. இங்கே கொஞ்சம் பேர் தான் இருப்பார்கள். இங்கே குழந்தைகளாகிய நீங்கள் ஞானத்தை எடுக்க வேண்டும். இது படிப்பல்லவா?

யார் கிடைத்தாலும் அவருக்கு இரண்டு தந்தைகள் இருக்கிறார்கள் என்பதை சொல்ல வேண்டும் - லௌகீகம் மற்றும் பரலௌகீகம். துக்கத்தில் பரலௌகீக தந்தையைத் தான் நினைவு செய்கிறார்கள். அந்த பாபா இப்போது வந்திருக்கிறார். மிக அன்பான சிவபாபா ஆவார். கிருஷ்ணர் கூட அனைவருக்கும் மிக அன்பானவர் ஆவார். ஆனால் சிவபாபா நிராகாரமானவர் ஆவார் மற்றும் கிருஷ்ணர் சாகாரமானவர் (சரீரமுடையவர்) ஆவார். கிருஷ்ணரை அனை வரும் தந்தை, என்று சொல்ல மாட்டார்கள். அவர் உலகத்திற்கு எஜமானர் ஆவார். அவரை கூட உருவாக்குபவர் சிவன் தான். மற்றபடி கிருஷ்ணர் என்ன செய்கிறார்? ஒன்றும் கிடையாது. தமோ பிரதான ஆத்மாக்களை பாபா தான் வந்து சதோபிரதானம் ஆக்குகிறார். ஆக அவருடைய புகழ் தான் பாடப்பட வேண்டும் அல்லவா?. கிருஷ்ணரோ குழந்தை ஆவார், அவருடைய நடனம் போன்றவைகளைக் காண்பிக் கிறார்கள். சிவபாபா என்ன நடனம் ஆடுவார்? நீங்கள் அனைவரும் பார்வதிகள், என்று பாபா புரிய வைக்கின்றார். அமரநாத் சிவன் உங்களுக்கு கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். வேறு எந்த பார்வதியும் கிடையாது. அர்ஜுன் கூட ஒருவர் கிடையாது, நீங்கள் அனைவரும் அர்ஜுனர்கள் தான். நீங்கள் அனைவரும் திரௌபதிகளே! மானபங்கப்படுத்தும் அவர்கள் துச்சாதனர்களாவர். அப்போது, பாபா எங்களைக் காப்பாற்றுங்கள், என்று கூப்பிடுகிறார்கள். பாபா கூறுகின்றார் - குழந்தைகளே ஒருபோதும் மானப்பங்கப்படக் கூடாது. திரௌபதியை துகிலுரியும் போது கிருஷ்ணர் 21 சேலைகள் கொடுத்ததாக காட்டு கிறார்கள் அல்லவா? இப்போது 21 சேலைகளை அணிகிறார்களா என்ன? இதைக் கூட ஒரு விளையாட்டாகக் (நாடகமாக) காட்டுகிறார்கள். கிருஷ்ணர் மேலே இருந்து 21 சேலைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார். இப்போது 21 சேலைகளை எப்படி அணிய முடியும்? உண்மையில் அர்த்தம் இது தான் - நீங்கள் 21 பிறவிகளுக்கு ஒருபோதும் மனப்பங்கம் அடையாதபடி பாபா உங்களை காப்பாற்றுகிறார். நல்லது.

இனிமையிலும் இனிமையான இனிய குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத்

தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) உள்ளுக்குள் பாபா-பாபா என்று சொல்லிக் கொண்டே பாபாவுக்குச் சமமாக இனிமை யானவராக ஆக வேண்டும். ஆத்ம-அபிமானி ஆகி இருக்க வேண்டும். படிப்பின் மீது முழுமையான கவன கொடுக்க வேண்டும்.

(2) மிகவும் அன்பான தந்தையை நினைவு செய்து கண்டிப்பாக தூய்மையாக ஆக வேண்டும். நினைவின் அக்னியின் மூலம் விகாரங்களின் துருவை நீக்கி உண்மையான தங்கம் ஆக வேண்டும்.

வரதானம்: மலை போன்ற விசயத்தையும் ஒரு பாபா என்ற வார்த்தையின் நினைவின் மூலம் பஞ்சு போன்று ஆக்கக் கூடிய சகஜயோகி ஆகுக.

சகஜயோகி ஆவதற்கு ஒரு வார்த்தை நினைவில் கொள்ளுங்கள் - என்னுடைய பாபா அவ்வளவு தான். எந்த விசயம் வந்தாலும், இமயமலையை விட பெரியதாக இருந்தாலும் பாபா என்று கூறினால் மலை கடுகு போன்று ஆகிவிடும். கடுகும் சிறிது கடினமாக, வெடிக்கக் கூடியதாக இருக்கும், பஞ்சு லேசாக இருக்கும். ஆக எவ்வளவு பெரிய விசயமும் பஞ்சு போன்று இலேசாக ஆகிவிடும். உலகத்தினர் பார்க்கும் போது இது எப்படி சாத்தியமாகும்? என்று கேட்பார்கள். இது இவ்வாறு நடக்கும் என்று நீங்கள் கூறுவீர்கள். பாபா என்று கூறியதும் இதை இவ்வாறு செய்யுங்கள் என்று புத்தியில் தூண்டுதல் (டச்) ஏற்படும். பிறகு எளிதாகி விடும். இதுவே சகஜயோகி வாழ்க்கையாகும்.

சுலோகன்: அன்புக் கடலின் அன்பில் மூழ்கியிருந்தீர்கள் எனில் சதா நெருக்கம், சமம் மற்றும் சம்பன்ன பவ என்ற வரதானியாக ஆகிவிடுவீர்கள்.